**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 457/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திரு. கோவிந்தராஜ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

1 ம் மற்றும் 3 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of January 2026.

நான் வாகைகுளத்தில் வசித்து வருகிறேன். சாட்சி சேகர் என்பவரை தெரியும். அ.சா.1 இசக்கிமுத்துவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி சதிஷ் குமார் என்ற சதிஷ் ராஜா என்பவரை தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு மதியம் 02.00 மணியளவில் ஊர் நுழையும்வழியில் நான் மற்றும் சில நபர்கள் நின்றிருந்தோம்,அப்போது மூன்றடைப்பு போலீஸார் வந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். போலீஸார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் கையெப்பம் செய்து கொடுத்தேன். காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெப்பம் என்னுடையதுதான். அது **<u>அ.சா.ஆ.</u>**2 ஆகும். அது எழுதப்படாத வெள்ளை பேப்பரில் தான் கையெப்பம் செய்தேன். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 23.05.2019 ஆம் தேதி 22.00 மணியளவில் நானும் சேகர் என்பவரும் எங்கள் ஊர் சமுதாய பலகையில் நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த மூன்றடைப்பு காவல்நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண் 58/2019 வழக்கின் சம்பவயிடத்தை பார்த்து டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்து, பார்வை மகஜரில் நானும் சேகர் என்பவரும் கையெப்பம் செய்ததாக போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.01.30 15:45:28 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | | |
|---|---|---|
| **IN THE COURT OF** | | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | } | CC.No. 457/2019 |
| Deposition Of Witness for | } | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | | திரு. பர்வின் |
| Husband Name / Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Religion | | Muslim/Christian/Hindu |
| Age | | /2026 |

1 ம் மற்றும் 3 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of January 2026.

நான் வாகைகுளத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 இசக்கிமுத்துவை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி சதிஷ் குமார் என்ற சதிஷ் ராஜா என்பவரை தெரியும். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து தெரியாது. அ.சா.1 யை யார் அசிங்கமாக பேசினார் என்றும், கொலைமிரட்டல் விடுத்தார் என்றும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 23.05.2019 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் நானும் எனது நண்பர்களும் எங்கள் ஊரில் உள்ள சமுதாய பலகை அருகே உட்கார்ந்திருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி சதீஷ்குமார் என்பவரும் பைக்கில் அங்கு வந்து அ.சா.1 யை பார்த்து அசிங்கமாக பேசி தாக்கினார்கள் என்றும், நானும் மற்றும் அங்கு

இருந்தவர்கள் சத்தம்போட்டபின்பு எதிரிகள் அ.சா.1 யை பார்த்து கொலைமிரட்டல் செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், சாதியை சொல்லி அசிங்கமாக திட்டினார் என்றும், போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.01.30 15:45:34 +0530

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 457/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. இசக்கிமுத்து |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

1 ம் மற்றும் 3 ம் எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of January 2026.

நான் வாகைகுளத்தில் வசித்து வருகிறேன். வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி சதிஷ் குமார் என்ற சதிஷ் ராஜா என்பவரை தெரியும். எனக்கு வழக்கு சம்பவம் குறித்து தெரியாது. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நான் வாகைகுளத்தில் வீட்டில் இருந்தபோது போலீஸார் என்னிடம் கையெப்பம் கேட்டார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையெப்பம் செய்தேன். அதில் என்ன எழுதியிருந்த விபரம் தெரியாது. என்னை யாரும் அசிங்கமாக பேசி மிரட்டல் விடுக்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள இசக்கிமுதுது என்ற கையெப்பம் என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 23.05.2019 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எங்கள் ஊரில் உள்ள சமுதாய பலகை அருகே உட்கார்ந்திருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி சதீஷ்குமார் என்பவரும் பைக்கில் அங்கு வந்து என்னை பார்த்து அசிங்கமாக பேசி தாக்கினார்கள் என்றும், அங்கிருந்தவர்கள் சத்தம்போட்டபின்பு எதிரிகள் என்னை பார்த்து கொலைமிரட்டல் செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள் என்றும், சாதியை சொல்லி அசிங்கமாக திட்டினார் என்றும்,அதனால் மூன்றடைப்பு காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்ததாகவும், போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.01.30 15:45:41 +0530